**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.400** **நாள்: 18.08.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 3,11,285 தெரு மின் விளக்குகள் 100% ஒளிர்வதை உறுதி செய்யும் வகையில் நேற்று (17.08.2026) இரவு மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், ஏரியாத 2,225 தெரு மின் விளக்குகள் கண்டறியப்பட்டு, அவற்றை உடனடியாக ஒளிரச் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், தெருக்கள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகளில், மயான பூமிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மின் விளக்குகளும் உயர் கோபுர மின் விளக்குகளும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மின் விளக்குகளும் 100% ஒளிர்வதை உறுதி செய்திடும் வகையில், அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இணை ஆணையாளர்கள் மற்றும் 1 முதல் 15 மண்டல அலுவலர்கள் ஆகியோர் மூலமாக நேற்று 17.08.2026 இரவு முழுவதும் அனைத்து தெரு மின்விளக்குகளும் 100 சதவீதம் ஒளிர்வது குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த கள ஆய்வில் மொத்தமுள்ள 3,11,285 தெரு மின் விளக்குகளில் 2,225 தெரு மின் விளக்குகள் ஏரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது.

இவற்றில், மழைநீர் வடிகால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியப் பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் 860 தெரு மின்விளக்குகளும், புதை மின்வட பழுதினால் 311 தெரு மின்விளக்குகளும், 1,054 எண்ணிக்கையிலான எல்.இ.டி. (LED) மின் விளக்குகள் ஏரியாமல் இருப்பது கண்டறியப்பட்டது-

பணிகள் நடைபெறும் இடங்களில் தற்காலிக தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. எரியாத எல்.இ.டி. (LED மின் விளக்குகளை 24 மணி நேரத்திற்குள்

சரிசெய்து ஒளிர வைக்கவும், புதை மின்வடம் பழுதினை 48 மணி நேரத்திற்குள் சரிசெய்து ஒளிர செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி ஆணையர் அவர்கள் உத்தரவின்படி, மரக்கிளைகளால் விளக்குகளின் வெளிச்சம் பாதிக்கப்படும் இடங்களைக் கண்டறிந்து, மரக்கிளைகள் வாரந்தோறும் அகற்றப்பட்டு தெரு மின்விளக்குகள் நன்கு ஒளிர்வதை உறுதி செய்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தெரு மின்விளக்குகள் பழுது பார்க்கும் சமயத்திலும் மற்ற நேரத்திலும் மரக்கிளைகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மின் விளக்குகள் அனைத்தும் ஒளிர்வதைத் தொடர்ந்து கண்காணித்து அனைத்து மின் விளக்குகளும் நூறு சதவீதம் ஒளிர்வதை உறுதி செய்திட மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒளிராத மின் விளக்குகள் தொடர்பாக பொதுமக்கள் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**